சுருக்கம்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – வேலைவாய்ப்பு பிரிவு - அரசு, பொதுத்துறை மற்றும் உள்ளாட்சி துறை அலுவலகங்களில் பூர்த்தி செய்யப்படவுள்ள பணிக்காலியிடங்களின் விவரங்களை தேசிய தொழில் நெறி வழிகாட்டு மைய இணையத்தில் (National Career service portal) உள்ளீடு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.1) துறை

அரசாணை (நிலை) எண்: 73

நாள்: 19.04.2017,
ஹேவிளம்பி சித்திரை 6,
திருவள்ளுவராண்டு 2048.

மீண்டும் படிக்கப்பட்டது.

1. அரசாணை நிலை எண்.44 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி1) துறை, நாள் 11.03.2015.

படிக்கப்பட்டது.

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநரின் கடிதம் எண்.பப1/29062/ 2016, நாள் 04.02.2017.

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பூர்த்தி செய்யப்படவுள்ள பணிக்காலியிட விவரங்கள் அனைத்தும், செய்தித்தாளின் வழி விளம்பரம் அளித்து பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க ஆணையிடப்பட்டுள்ளது.

2. அதனை தொடர்ந்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநரின் கருத்துருவை நன்கு பரிசீலனை செய்து அரசு கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

“அரசு, பொதுத்துறை மற்றும் உள்ளாட்சி துறை அலுவலகங்களில் பூர்த்தி செய்யப்படவுள்ள பணிக்காலியிட விவரங்கள் அனைத்தும், செய்தித்தாளின் வழி விளம்பரம் அளித்து பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதோடு கூட அப்பணிக் காலியிடங்களின் விவரங்களை தேசிய தொழில் நெறி வழிகாட்டு மைய இணையத்திலும் (National Career Service Portal) உள்ளீடு செய்ய வேண்டும். மேலும், அதனடிப்படையில் www.ncs.gov.in

..2.,

என்ற இணைய தளத்தில் அரசு, பொதுத்துறை மற்றும் உள்ளாட்சி துறை அலுவலகங்கள் வேலையளிப்போராக பதிவு செய்து கொண்டு அவ்வலுவலகத்தில் பூர்த்தி செய்யப்பட உள்ள பணிக்காலியிட விவரங்களை உள்ளீடு செய்ய வேண்டும்" (அதற்கான கையேடு மேற்படி இணையதளத்தில் உள்ளது).

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு செயலாளர்.

பெறுநர்

அனைத்து கூடுதல் தலைமைச் செயலாளர் / முதன்மைச் செயலாளர்/ செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–9.
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை–32.
அனைத்து பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
அனைத்து துறை தலைவர்கள் (இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை வழியாக),

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 09.
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசுச் செயலரின் தனிச்செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு–II) துறை, சென்னை – 09. (2 படிகள்)
கோப்பு எண். 14440/ஆர்1/2016 (சுத்த நகல்)
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/4/17
பிரிவு அலுவலர்
19/4/17